# யாழ் குடாவின் நன்நீரையும் பொன்மண்ணையும் காப்போம்

**(கனக நமநாதன் எல்.எல்.பி. - சட்டத்தரணி)**

இரணமடுக் குளநீரை யாழ்ப்பாணத்திற்கு குடிநீராக கொண்டுவருவது பற்றிய வாதப்பிரவாதங்கள் தொடர்ந்தும் சூடாக இடம்பெற்றுவரும் அதே வேளையில் அரசாங்கம் திரைசேரிக்கு பொறுப்பானவரை கிளிநொச்சிக்கு அனுப்பி குடிநீர்த் திட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்குமளவுக்கு என்ன பின்புலம் இருக்கிறது என்பதில் வடமாகாண மக்கள் நன்கு தெளிவடையவேண்டும்.

கிளிநொச்சி நெற்செய்கையாளரின் பாச்சல் நீருக்கான உரிமைக்குரல் ஒரு பக்கம் ஒலிக்க மறுபக்கம் யாழ் குடா மக்களின் வாழ்வா சாவா என்ற வருங்காலம் பற்றிய பயம் குடிகொண்டிருப்பதை பலரும் அறியாதிருப்பது வேதனையளிக்கின்றது. குடிநீர்த் திட்டத்தை செயற்படுத்தி குழாயின் மூலம் நீரைக் கொடுத்து உவர் நீரை நன்நீராக்கும் ஆறுமுகத்திட்டமாகிய மழைநீர் சேமிப்பில் அக்கரையிழந்து குடாநாட்டு கிணறுகளை மேலும் உவர்நீர்க்கிணறுகலாக்கியும் விவசாய செயற்கைப்பசளைகளின் தாக்கத்தால் மாசுபட்ட நீர்க்கிணறுகளாக்கியும் மாற்றமடையச் செய்து **‘குழாய் நீரில்லாவிட்டால் குடிநீரில்லை’** என்ற நிலைமையில் யாழ் குடாவாசிகள் வாழ்கையை ஓட்டவேண்டிய காலம் ஒன்று விரைவில் ஏற்படும் என்பதை தூரநோக்குடன் சிந்திப்பவர்கள் ஏற்காதிருக்கமாட்டார்கள்.

இது பற்றி இப்போதே நாம் சிந்திக்காமல் வாழாவிருந்தோமானால் யாழ்ப்பாணக் குடாநாடு இன்னும் சில சகாப்தங்களின் பின் உவர் மண்ணையும் உவர் நீரையும் கொண்ட மக்கள் சீவிக்க முடியாத ஒரு பாலைவனமாக மாறக்கூடிய சூழலை உருவாக்கியதற்கு இந்தப் பரம்பரையினரே பொறுப்பானவர்களாக வரலாறு கூறும்.

மகாவலி நீர் கொண்டு இரணைமடுவை நிரப்புவது பற்றியும் அதனால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளையும் நிலைமைகளையும் இந்தக் கட்டுரையில் சேர்த்து விரிவாக்கிப் பெருக்காமல் தவிர்த்துக்கொள்கின்றேன். இது பற்றி விரிவான தெளிவான மகாவலி **‘B’** வலையம் மகாவலி **‘L’** வலையம் ஆகியவற்றில் நடைபெற்ற நிகழ்வுகளைக் கோர்த்து பிரிதொரு கட்டுரையில் விபரிக்கவுள்ளேன்.

யாழ் குடாநாட்டில் நிலக்கடிநீர் உவராகுதல் மாசுபடுதல் போன்றவற்றிற்கு கீழ்காணும் திணைக்களங்கள் சபைகள் ஆகியவை

சம்பந்தப்பட்டவையாகவுள்ளன. அவை (அ) மாகாண நீர்ப்பாசன திணைக்களம் (ஆ) மாகாண விவசாய திணைக்களம் (இ) சுகாதார திணைக்களம் (ஈ) கமநலச் சேவை திணைக்களம் (உ) உள்ளூராட்சி திணைக்களம் (ஊ) உள்ளூராட்சி சபைகள் (எ) நீர் வள சபை. இதில் கூறப்பட்ட திணைக்களங்கள் நிருவனங்களிடையே மண்வளம் குடிநீர் சம்பந்தமாக கூட்டுச் செயற்பாடுகள் கலந்தாலோசணைகள் இடம் பெறாது தங்களின் வேலைப்பகுதித் தேவைகளை மட்டும் நோக்காக கொண்டு இயங்கி வந்ததினாலேயே ஏற்கெனவே இருந்த நிலக்கீழ் நீரின் உவர்த்தன்மையாதல் மாசுபடுதல் ஆகிய நிலைமைகள் மோசமடையத் தொடங்கியது என்பதே உண்மையாகும். கச்சேரிகளில் இடம் பெறும் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இவ்வாறான முக்கிய விடயங்கள் விரிவாகவும் தெளிவாகவும் கலந்துரையாடப்பட நேர ஒதுக்கீடு பாதிப்பை ஏற்படுத்திவிடும். பல விடயங்களில் இதையும் ஒரு விடயமாக எடுத்து விவாதிக்காது தனியான ஒரு கூட்டம் சம்பந்தப்பட்ட திணைக்களங்களயும் நிருவனங்களையும் கூட்டி ஆராயவேண்டியதான செயற்பாடு சிறந்த பலனையளிக்கும். இவ்வாறான முடிவெடுத்தலில் (Decision Making) ஏற்பட்ட சிக்கலே இன்று விஸ்வரூபமெடுத்து பயனாளிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி பிரச்சிளையை பாரதுாரமாக்கிவிட்டது. திணைக்களங்கள் சபைகள் நேரத்திற்கு ஏற்றவாறு தீர்மானம் எடுத்தல் (Adhoc Decisions) எப்போதும் ஆபத்தான நிலைமையில் கொண்டுவிட்டுவிடும்.

நீர் உவராவதையும் மாசுபடுதலையும் குறைப்பதற்கும் அல்லது இல்லாமற் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பிலிருந்த அரச அமைப்புக்கள் சபைகள் தங்களது கடமைகளை நேர்த்தியாக செய்யாது கவனயீனமான செயற்பாட்டினாலேயே இன்று இந்தப் பரிதாபகரமான சூழ்நிலைக்கு யாழ்குடாநாடு தள்ளப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகமும் படிப்பித்தலோடு நீர்வளம் நில வளம் சம்பந்தமான படிப்பில் பிரச்சினைக்குரிய யாழ்குடாநாட்டீல் ஆங்காங்கே பரீட்சாத்தங்களையும் சோதனைகளையும் மேற்கொண்டு ஆய்வுகூடத்தில் பரிசோதனைகள் செய்து முடிவுகளை அந்தந்த அரச திணக்களப் பகுதியினருக்கு தங்களது சிபாரிசுளுடன் அறிவிப்பதோடு நின்றுவிடாமல் அறிக்கைகள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் பொதுமக்களுக்கு அறியக்கொடுப்பது சிறப்பாக இருக்கும். இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் தேவையான பல விடயங்களிலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு முடிவுகளை புத்தகங்களாக வெளியிட்டு வருகின்றது. இணையத்தளங்களில் பார்த்து அறிந்து கொள்ளுங்கள் என யாராவது கூறுவது இக்கால கட்ட நிலைமைகளுக்கு பொருந்தாது.

இணையத்தளங்களில் பார்த்து பொதுமக்கள் விவசாயிகள் அல்லது பாதிப்புக்குட்பட்டவர்கள் அறிந்து கொள்வதற்கு ஏற்ற வசதிகளும் நேரமும் இன்னமும் இங்குள்ள மக்களுக்கு உருவாகவில்லை என்பதை எவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏந்திரி ஆறுமுகம் அவர்களின் மழைநீர் சேமிப்பு திட்டத்தை நீர்ப்பாசன திணைக்களம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தாது கைவிட்டதற்கும் நிதிப் பற்றாக்குறைக்கும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் செயற்திறமையின்மையே காரணமாக கூறப்படுகின்றது. தற்போது முழு அளவில்லல்லாது ஓரளவுக்குமட்டுமே ஆறுமுகத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக அறியப்படுகின்றது.

**நீரில் உவர்த்தன்மையை குறைத்து படிப்படியாக நன்னீராக்குவதற்கு**

**ஆனையிறவு கடல் நீரேரி :** 77 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட ஆனையிறவு கடல் நீரேரி கிழக்கே சுண்டிக்குளத்திற்கும் மேற்கே ஆனையிறவுப் பாலத்திற்கும் இடைப்பட்டதாக அமைந்துள்ளது. வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் சிற்றாறுகள் மூலம் வடமாகாணத்தின் முக்கிய குளங்களை நிரப்பிக்கொண்டு வரும் மழை நீரில் மேலதிகமானவை இந்தக் கடல் நீரேரியை வந்தடைகின்றது. இந்த மழைநீரை கடலுடன் கலக்கவிடாது வருடா வருடம் இந்த கடல் நீரேரியில் சேமித்து வைக்கப்பட்டால் அதன் பயனால் யாழ் குடாவின் உவர்த்தன்மையை போக்கமுடியும் என வல்லுனர்கள் கருதுகின்றார்கள். வெள்ளப்பெருக்குக் காலத்திலும் மண் அணைகள் உடைக்கப்பட்டு நீர் கடலுடன் கலக்க முடியாதவாறான கெட்டியான அணைக்கட்டுக்கள் தற்போதுள்ள தொழில்நுற்ப பொறிமுறைகளை கையாண்டு நிர்மானிக்கப்படல்வேண்டும்.

**வடமராச்சி கடல் நீரேரி :** இதுவும் 77 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. ஆனையிறவு கடல் நீரேரியிலிருந்து வடமராச்சி கடல் நீரேரிக்கு மழை நீரை கொண்டு செல்வதற்கான முள்ளியான் தொடர் வாய்க்கால் திட்டமும் முன்னர் நிதித் தட்டுபாட்டினால் முழுமையாக முடிவுறுத்தாமல் போக நேர்ந்ததாக கூறப்படுகின்றது. இந்த வாய்க்கால் திட்டம் செவ்வனே செயற்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டிருந்தால் வெள்ளப்பெருக்கு காலத்திலும் கூட ஆனையிறவு கடல் நீரேரியின் அணைக்கட்டில் உடைவு ஏற்படாதிருந்து மேலதிக மழை நீர் வடமராச்சி கடல் நீரேரிக்கு சென்றடைந்திருக்கும்.

**தொண்டமான் ஆறு :** யாழ் குடா நாட்டுக்குள் கிடைக்கும் மழை நீர் தொண்மான் ஆற்றில் சேர்ந்து கொள்வதால் அதை வடமராச்சி கடல் நீரேரிக்கு எடுத்துச் செல்வதற்கு திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. நீரை தடைசெய்ய பாவிக்கப்பட்ட மரப்பலகைகள் சிதவடைந்ததால் மழை நீர்

கடல் நீருடன் கலந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது. இவை நிவர்த்தி செய்யக்கூடிய செயற்பாடுகள்.

**உப்பாறு கடல் நீரேரி** : இது 26 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இங்கும் அணைக்குப் பாவிக்கப்பட்ட மரப்பலகைச் சிதைவினால் கடல் நீருடன் மழை நீர் கலக்கக் காரணமாக அமைந்தது என அறிவிக்கப்பட்டது. இதையும் புதிய பொறிமுறைகளைப் பாவித்து சரியாக்கலாம்.

ஆகையால் புதிய தொழில்நுட்ப பொறிமுறை யுக்திகளை பயன்படுத்தி அணைக்கட்டுக்களின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தலாம். இதுவே முன்னர் இருந்த பெரும் குறைபாடாக காணப்பட்டுள்ளது. இரண்டாவதான தேவையான நிதி ஒதுக்கீடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு விடயங்களிலும் கவனம் செலுத்துவதாலும் அத்துடன் மாகாணசபை நிர்வாகத்தின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடிந்தால் அத்துடன் மாரிமழையும் பொய்க்காதிருந்தால் ஆறுமுகம் அவர்களின் மழைநீரை சேமித்து நன்னீராக்கும் ஆற்றுத்திட்டம் சில ஆண்டுகளிலேயே வெற்றிகரமாக பயனைக்கொடுக்க ஆரம்பித்துவிடும் என்பதை நம்பிக்கையுடன் கூறமுடியும்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புப் யாழ்ப்பாணப் பிரதிப்பணிப்பாளர் ஆறுமுகம் அவர்களின் யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத்திட்டம் அதாவது வட - கீழ் பருவப்பெயர்ச்சி காலத்தில் உப்பாறு தொண்டமான் ஆறு வடமராச்சி கடல் நீரேரி ஆளையிறவு கடல் நீரேரி ஆகியவற்றை மழை நீர் சேமிப்பினால் நிரப்பும் திட்டத்தினால் குடிநீரை நன்னீராக்க நீண்ட காலம் தேவைப்படும் எனக் கூறியிருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். **அதே நேரம் மழைநீர் சேமிப்புத்திட்டம் சிறப்பானதும் காலம்காலத்திற்கு நிரந்தரமானதும் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

*ஆகையால் 1960ம் ஆண்டில் அதாவது இற்றைக்கு 54 வருடங்களுக்கு முன் ஆரம்பித்திருந்த மழைநீர் சேமிப்புத் திட்டம் நேர்த்தியாகவும் நிதானமாகவும் செயற்படுத்தப்பட்டிருந்தால் யாழ் குடாநாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலைமையை தவிர்த்திருக்கலாம் என்பதை இங்கு சுட்டிக்காடடிப் பதிய வேண்டியுள்ளது.*

ஆனால் வடிகாலமைப்பு யாழ்ப்பாணப் பிரதிப்பணிப்பாளர் அத்திட்டம் தீவுப்பகுதிகளுக்கும் யாழ் மாநகரசபை பகுதிகளுக்கும் நன்மை பயக்காது எனவும் சுட்டிக்காட்டியுள்ளதை அவதானிக்க வேண்டியுள்ளது. நிச்சயமாக இவ்விரு பகுதிகளுக்கும் குழாய் நீர் வினியோகம் இன்றியமையாதது என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது.

## குடாநாட்டில் உவரற்ற குடிநீருள்ள கிணறுகள்

தற்பொழுது திருநெல்வேலயிருந்தும் கோண்டாவிலிருந்தும் யாழ் மாநகர சபையின் ஒரு பகுதிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருவதை ஞாபகப்படுத்துவதோடு அச்சுவேலிப் பகுதியிலும் குடிநீர் வழங்கல் நடைபெறுகின்றது. நிலாவரை நீரும் வேறும் சில இடங்களிலும் குழாய் மூலம் நன்நீர் வழங்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நாயன்மார்கட்டு கிராமத்தில் கிணறுகளில் உவர்த்தன்மை கொண்ட நீர் இருக்கும் ஒரு பகுதியில் அங்கேயே ஆயுர்வேத ஆஸ்பத்திரி அமைந்துள்ள கிணற்றில் நன்நீர் காணப்படுகின்றது. குழாய் மூலம் அந்நன்நீர் அவ்வூர் மக்களுக்கு வினியோகிக்கப்பட்டு வருவதை ஆச்சரியத்துடன் அவதானித்ததோடு அவ்வாறு சூழல்கள் மேலும் பல இடங்களில் அமைந்திருப்பதும் அறியப்பட்டது. பாஷையூருக்கு அடுத்தாக அமைந்துள்ள மணியன் தோட்டத்தில் அருமையான உவர்தன்மையற்ற தண்ணீர் கிடைப்பதாக மக்கள் கூறினார்கள். இது கடற்கரையிலிருந்து 500 மீற்றர் கூட துாரமில்லாத இடமாகும். வெற்றிலைக்கேணி என்ற கடற்கரையை அண்டிய ஊரில் காணி வைத்திருக்கும் ஒருவர் தங்களின் கிணற்றிலுள்ள நீரில் உவர்த் தன்மையேயில்லை என்று சொல்லியிருந்தார். காரைநகர் நையினாதீவு மற்றும் தீபகங்களிலும் கோவில்கிணறு வேறும் சில கிணறுகளில் நல்ல தண்ணீர் கிடைப்பதாக அங்குள்ள மக்கள் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் அறியுமிடத்து கடலையண்டிய இடங்களிலும் உவர்நீருள்ள இடங்களிலும் கூட நன்நீர் கிணறுகளும் இருக்கின்றன என்பது உண்மையே.

யாழ். மாவட்ட வடிகாலமைப்பு பிரதிப்பணிப்பாளர் வரட்சிக் காலங்களில் இயக்கச்சி பகுதியிலுள்ள நிலக்கீழ் நீரை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.. அப்படியானால் நிலக்கீழ் நீரை நம்பியே நீர் வழங்கல் சபையுமுள்ளது எனலாம். அத்துடன் தற்போது நடைமுறையிலுள்ள சிறிய குடிநீர் வழங்கல் சேவைகள் மூலமும் நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் கூறப்பட்டுள்ளது.. யாழ் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் மூலம் யாழ் குடாநாட்டின் முழு நீர்த்தேவையையும் நிறைவு செய்ய முடியாதுள்ளது என அவர் கூறியிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

## யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத்திட்டம்

*யாழ்- கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் உபகூறு 2 இல் ஆறுமுகம் அவர்களின் யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத்திட்டம் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்பது நிறைவைத் தருகின்றது. ஆனால் சுற்றுச்சூழல் ஆய்வு சமூக ஆய்வு தொழில்நுட்ப ஆய்வு என மேலும் காலத்தை வீணடிக்காது ஏற்கெனவே*

*நடைமுறைப்படுத்தப்பட்ட* ***ஆறுமுகம் திட்டத்தை புதிய தொழில்நுட்ப யுக்திகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 2014–2015ம் ஆண்டு மாரிப் பருவப்பெயர்ச்சி மழைநீரை பயன்படுத்தி நன்நீர் சேமிப்பை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பது சாலச்சிறந்தது என்ற யோசனை முன்வைக்கப்படுகின்றது.***

கமநலச்சேவை திணைக்களத்தின் கீழ் வரும் சிறு குளங்கள் ஏரிகள் கேணிகள் குட்டைகள் போன்றனவற்றில் பல பராமரிப்பின்றி தூர்ந்த நிலமையில் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. சில குளங்களின் கரையோரங்களில் கல்வீடுகள் அமைத்தும் மக்கள் குடிறேியுள்ளார்கள். திருநெல்வேலி பரவக்குளம் கன்னாதிட்டி காளிகோயில் குளம் இதற்கு எடுத்துக்காட்டுக்கள். குளக்காணியை அத்துமீறிப் பிடித்திருந்தால் அவர்களை மாற்றுக்காணி வழங்கி வெளியேற்றிவிட்டு குளப் புரணமைப்பு வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

கார்பட் றோட்டுக்கள் போடப்பட்டதினால் மழைகாலத்தில் ஒரு சிறுகுளத்திலிருந்து இயற்கை நீரோட்டத்தினால் கீழுள்ள வேரோரு சிறுகுளத்திற்கு நீர் செல்வது பல இடங்களில் தடைப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றார்கள்.

யாழ்பாண - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் மூன்று அடிப்படை அம்சங்களைக் கொண்டதாக கூறப்படுகின்றது. ஒன்று கிளிநொச்சிக்கும் பூனகரிக்கும் குடிநீர் வழங்கல் இரண்டாவது யாழ்குடாவுக்கு குடிநீர் வழங்கல் மூன்றாவது யாழ்ப்பாண மாநகரசபை வேறும் மக்கள் குடியிருப்பு நெருக்கமாகவுள்ள பகுதிகளில் நிலக்கீழ் மனிதக்கழிவகற்றல் வலையமைப்பை உருவாக்குதல்.

நிலக்கீழ் மனிதக்கழிவகற்றல் வலையமைப்பை உருவாக்குவது ஒரு சிறந்த திட்டம் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். இதனால் நிலக்கீழ்நீர் மலக்கழிவால் மாசுபடல் ஒழிக்கப்பட்டுவிடும். இதைச் செயற்படுத்த வேண்டியது இன்றைய தேவைப்பாடு.

குடிநீர் அருந்தலான இடங்களுக்கும் உவர்த்தன்மையுள்ள இடங்களுக்கும் காரைநகர் உட்பட தீவுப் பகுதிளுக்கும் குடிநீர் வழங்கலை செவ்வனே செய்யக்கூடிய தற்போது நடைமுறையிலுள்ள சிறிய குடிநீர் வழங்கள் சேவைகள் மூலமும் அது போன்று புதிய குடிநீர் வழங்கல் சேவைகளை உருவாக்கியும் அவை போதாது எனப்படும்போது இயக்கச்சிப் பகுதியிலுள்ள நிலக்கீழ் நீரை பயன்படுத்தியும் கொள்ளலாம் என்ற ஒரு ஆலோசணை முன்வைக்கப்படுகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் பல கடலிலிருந்து குடிநீர் பெறும் உபாயத் திட்டங்களை வகுத்து உருவாக்கி அவற்றை செவ்வனே செயல்படுத்தியும் வருகின்றார்கள். ஏன் நாங்களும் யாழ்பாணத்தை சுற்றிவர இயற்கையாகவேயுள்ள கடல் நீரை குடி நீராக மாற்றி பயன்பெறக்கூடாது.

***ஆகையால் யாழ்-கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் மேற்சொல்லப்பட்டதற்கமைய சில மாற்றங்களுடன் திருத்தம் செய்யப்பட்டு செயற்படுத்தப்படுமானால் நல்ல பலனையும் பாவனையையும் நீண்ட கால குடிநீருக்கான தீர்வையும் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமிருக்காது.***

**திட்டங்கள் அதன் வாசகங்கள் நிபந்தனைகள் மக்களின் தேவைக்கேற்பவும் உணர்வுகளுக்கேற்பவும் மாற்றியமைக்கப்படுவதில் எந்தத் தவறுமில்லை.** இது வியாபாரத்திற்கான நஸ்டம் இலாபம் கிடைக்கும் உடன்படிக்கையல்ல. **தேக ஆரோக்கியத்தையும் நோய்பிணியை தவிர்ப்பதையும் அடிப்படையாகக் கொண்ட உடல் நலம்தரும் திட்டம்.** கிடைக்கவுள்ள நிதியில் மேலதிகமாக இருப்பதை கமநலச்சேவை திணைக்களத்தின் கீழ் வரும் சிறு குளங்கள் ஏரிகள் கேணிகள் குட்டைகள் போன்றனவற்றை புரணமைக்கவும் மேலும் யாழ்ப்பாண ஆற்றுத்திட்டத்தின் வேலைத்திட்டங்களுக்கு உபயோகப்படுத்தவும் நிலக்கீழ் நீர் மாசுபடுதலை தவிர்க்க நடவடிக்கை எடுப்பதற்கு விவசாயத் திணைக்களத்திற்கு **பசளைப்பாவிப்பு நீர் பாய்ச்சல் முகாமைத்துவம் போன்றவற்றில் விவசாயிகளுக்கு அறிவூட்டல் மற்றும் நாசினிகளின் பாவிப்பை குறைத்து உயிரியல் காரணிகளால் கட்டுப்படுத்தலை (Biological control) ஊக்குவிக்கவும் செயற்பாடுகள் தேவை.** பூச்சி புளுக்களின் தாக்கத்தை எதிர்த்து இன்று விவசாயிகள் பூச்சிநாசினி மருந்துகளை பெருமளவில் விசிறி சந்தைக்கு கொண்டு வரும்போதே மருந்தின் மணம் மூக்கைத் துளைக்கின்றது. இவ்வாறான கூடுதல் கிருமி நாசினி பாவிப்பினால்தான் மக்களுக்கு தீராத புற்று நோய்வரக்காரணமென்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. மற்றும் யாழ் பல்கலைக்கழக விவசாய பீடமும் செயற்கை உரத்திற்கு மாற்றீடாக இயற்கை உரங்கள் பற்றியும் அத்துடன் கிருமி நாசினி பூச்சி நாசினி பூஞ்சண நாசினி களை நாசினி போன்றவற்றிற்கு பதிலீடாக புதுக் கண்டுபிடிப்புக்களை மூலிகைகள் மூலமும் தாக்கமில்லாத மாற்று மருந்துகள் வேறும் உயிரியல் காரணிகளால் கட்டுப்படுத்தல் போன்றவற்றில் ஆராச்சிகளை மேற்கொள்ளவும் நிதியைப் பயன்படுத்தலாம்.

**நிலக்கீழ் நீர் மாசுபடுதலை தவிர்க்க**

நீர் மாசுபடுவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. அதில் ஒன்று விவசாயம் சம்பந்தப்பட்டது மற்றையது சுகாதாரம் சம்பந்தப்பட்டது.

**விவசாயம் சம்பந்தப்பட்டது**

விவசாயிகளோ அல்லது விவசாயத் திணைக்களமோ பின்விளைவுகளையோ அல்லது பக்கவிளைவுகளையோ பற்றி எதுவித கவனமும் செலுத்தாது தங்களது உற்பத்தி வேலைத்திட்டங்களை மட்டும் சிந்தித்து செயற்பட்டதினால் ஏற்பட்ட பயங்கர பின்விளைவே நிலக்கீழ் நீர் மாசுபட்டதற்கு அதாவது நைற்றேட் பொஸ்பேட் மற்றும் இரசாயணக் கலவைகளின் செறிவு நீரில் ஏற்பட்டதற்கு காரணங்களாகின்றன என்பது தற்போது புத்திஜீவிகள் எல்லோராலும் ஏற்கப்பட்டுள்ளது..

நீா் வழங்கல் வடிகாலமைப்புப் பிரதிப்பணிப்பாளரும் தனது விளக்கத்தில் இதுபற்றி உன்னிப்பாக கவனம் செலுத்தியுள்ளாா். எமது விவசாயிகளுக்கு சரியான ஆலோசணைகளை சொல்லிக்கொடுக்கக்கூடிய வசதிகள் வழிமுறைகள் ஊடகங்கள் திருப்பதிகரமானதாகவில்லை. பத்திரிகையில் சில விடயங்கள் வெளிவந்தாலும் அவற்றை விவசாயிகள் அணைவரும் வாசித்து அறியக் கூடியதாக வாசிப்புப் பழக்கம் ஏற்படவில்லை. வானொலி தொலைக்காட்சி போன்ற ஊடகங்களே மாலை நேர நிகழ்ச்சி மூலமே விவசாயிகளை சென்றடையக்கூடிய விவசாய அறிவுகளை புகட்டலாம். கூடிய பசளையிட்டால் கூடிய விளைச்சலைப் பெறலாம் என்பதும் தண்ணீரை பெரிய பாத்திகளில் நிறைவாக பாச்சுவதால் (flood irrigation) நீர் பாச்சும் கால இடைவெளியை கூட்டலாம் எனவும் தவறாக விளங்கிக்கொண்டு செயல்படுவதினால் அவை மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பயிர்களின் தன்மையைப் பொறுத்து பயிரின் வேர்களுக்கு உணவுக் கரைசலை கொடுக்கக்கூடிய அளவுக்கு நீர் போதுமானது. மேலதிகமாக பாச்சப்படும் நீர் மண்ணிடையேயுள்ள நுண்ணிய துவாரங்களினூடாக நிலக்கடிநீரை நோக்கி கீழே செல்லும். நீர் மட்டுமே கீழ் செல்லாது செயற்கைப் பசளையுடன் சேர்ந்து கரைசலாகி பயிரின் வேருக்கு எட்டாதவாறு அடியில் சென்று பின் மழைபெய்யும் வேளைகளில் மேலும் கீழே சென்று நிலக்கடி நீருடன் கலந்து நன்நீரை மாசடையச் செய்கின்றது.

இந்தியாவில் விவசாய முயற்சிகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதை “ பொதிகை” தொலைக்காட்சி நிகழ்சிகளில் பாா்த்து அறிந்து கொள்ளலாம். **சொட்டு நீர்ப்பாசனம் தெளிப்பு நீர்ப்பாசனம் விசிரல் நீர்ப்பாசனம் என்றும் நீரை அளவோடு பாவிக்கும் மேட்டு நீர் பாச்சல் முகாமைத்துவம்**

**வளர்ச்சியடைந்து வருகின்றது.** இராசாயண செயற்கைப் பசளைக்குப் பதிலாக கூட்டெரு மாட்டெரு மண்புளு போன்ற இயற்கைப் பசளைகளை மேட்டுப்பயிர் தோட்டங்களில் பாவிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

***குடாநாட்டு விவசாயிகள் விவசாயத்திற்கு பாவிக்கப்படும் நீரை சிக்கனப்படத்தும் நீர் முகாமைத்துவத்தை மேற்கொள்ளாத வரையிலும் பயிருக்கு ஏற்ற பசளைகளை அளவோடும் தவணை முறையில் பகுதிபகுதியாக பாவிப்பதையும் உறுதிப்படுத்தாத வரையிலும் அல்லது அவற்றிற்கு மாற்றீடாக இயற்கை உரப்பசளைகளை பாவிக்க முன்வராத வரையிலும் குடாநாட்டு குடிநீர் மட்டுமன்றி மண்வளமும் பாழ்பட்டுவிடும்.***

விவசாயம் இயந்திரமயமாக்கப்பட்டதால் மண்வளத்தை சிறப்பாக வைத்திருக்கக்கூடிய பல விவசாய முறைமைகள் கைவிட்டுப்போய்விட்டது. விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்கும் விவசாயம் செய்வதற்கு உகந்த தொழிலான இலைகுழை தாட்டு கொத்துதல் என்பது இப்போது வெகு சிலராலேயே கைக்கொள்ளப்படுகின்றது. முன்னர் பூவரசங்குழை பனையோலை காவிலாய் போன்று வேறும் பசும்தாழ்ப் பசளைகளை மண்ணுக்குள் தாட்டுக் கொத்திப் புரட்டுவார்கள். இப்போ பூவரசு வேலிகளெல்லாம் மதில்களாகிவிட்டன. யுத்தத்தோடு பனைகளையும் பறிகொடுத்துவிட்டோம். காவிலாய்க்கு பதிலாக பார்த்தீனியம் பரந்து கிடக்கிறது. இந்த நிலமையில் பசும்தாழ்களுக்கு வழியில்லை. இது பற்றியதும் இதற்கு மாற்றீடாக பசும்தாழை பெறக்கூடிய மரங்கள் பற்றியதுமான ஆராச்சிகளை செய்ய விவசாயப் பகுதியோ பல்கலைக்கழகமோ கவனம் செலுத்தியுள்ளனரா? இயல்பாக மிக விரைவாக வளரக்கூடிய இப்பில் இப்பில் கிளிசூரியா போன்ற மரங்களின் இலைகுழைகள் மாறிறீடாகுமா என்பது பற்றி விவசாயிகளுக்கு விளக்கவேண்டும்.

முன்னர் மாட்டுரம் நெடுங்கேணி ஓமந்தை புளியங்குளம் போன்ற இடங்களிலிருந்து லொறிகள் மூலம் கொண்டுவரப்பட்டு தோட்டங்களில் பரவிச் சாரிவிடுவார்கள். இப்போ அதையும் கொண்டு வருவதற்கு கூடிய செலவாகின்றது. உள்ளூரில் மாட்டுவளர்ப்பை ஊக்குவிக்க திட்டங்கள் போடப்பட்டுள்ளனவா? மாட்டுத்தீவனப் பற்றாக்குறையால் மாடு வளர்க்க மக்கள் தயங்குகின்றார்கள். 4500 ஹெக்டெயர் நெற்செய்கை நிலங்கள் மண் உவர்த்தன்மையால் தரிசாகிவிட்டன என அறிக்கைகள் கூறுகின்றன. வைக்கல் பனையோலை குறைபாட்டை நிவர்த்தி செய்ய இலகுவாகவும் விரைவாகவும் உற்பத்தி செய்யக்கூடிய வெட்டுப்புல் (fodder grass) வளர்ப்பில் மக்களை ஊக்குவித்து அதை ஒரு பணப்பயிராக செய்கையில் ஈடுபடுத்தி சந்தைக்குக் கொண்டுவரவேண்டும். இதனால் மாட்டு வளர்ப்பை கூட்டி பால் தேவையையும் ஓரளவு மாட்டுரத் தேவையையும் பூர்த்தியாக்கலாம்.

மாட்டு சாணகத்திற்கு பதிலீடாக கூட்டுரம் (compose) தயாரிப்பில் கூட்டு முயற்சிகள் எடுக்கப்படவேண்டியது இக்காலத் தேவைப்பாடு. பிரதேச சபைகள் இந்த முயற்சியில் முழுதாக ஈடுபடவேண்டும். நல்லூர் பிரதேச சபை முன்மாதிரியாக செயற்கை உரத் தயாரிப்பில் ஈடுபட்டாலும் அவர்களின் அதிகாரத்தின் கீழுள்ள சகல கிராமங்களிலும் கிடைக்கும் குப்பை கூழங்களை சேகரிக்கவும் அவற்றை கிடங்குகள் வெட்டி புதைத்து உரமாக்கக் கூடிய ஆளணி வாகன பற்றாக்குறையுள்ளது. வலி வடக்குப் பிரதேச சபை சேகரித்த குப்பைகளை பழைய சீமெந்து தொழிற்சாலையின் பக்கமாகவுள்ள பள்ளத்தாக்கில் கொட்டிவிடுகின்றது.

*யாழ்குடா நாட்டின் மண்வளத்தை தக்க வைக்க பிரதேச சபைகள் நிறையவே பணியாற்றமுடியும். இதற்கென தனி நிர்வாகம் ஏற்படுத்தி நிதியை ஒதுக்கி தேவையான வண்டிகள் வாகனங்கள் ஆளணியைப் பெற்று சிறப்பாக இந்த முயற்சியில் ஈடுபடுவதால் தேவையான கூட்டு உரப்பசளை விவசாயத்திற்கு கிடைப்பதுமல்லாமல் ஊர்மனைகளையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்கலாம். மக்களின் நோய் பிணிகளும் குறைவடையும். இதுபற்றி உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்துமா?*

விவசாயம் சம்பந்தமாக நிலக்கடிநீர் மாசுபடுதலை கட்டுப்புடுத்த இரசாயண பசளைப் பாவிப்பையும் பயிர்களுக்கு தெளிக்கும் நாசினிகளின் பாவிப்பையும் குறைக்கும் நோக்குடனும் அவற்றிற்கு மாற்றீடாக செயற்படக்கூடிய விடயங்களையும் கவனத்தில் எடுப்பதினாலேயே மாசுபடுதலை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

**சுகாதாரம் சம்பந்தப்பட்டது**

சுகாதாரம் சம்பந்தமாக நிலக்கடிநீர் மாசுபடுதலை தவிர்க்க இரண்டு தாபனங்கள் கவனமெடுக்க வேண்டியுள்ளது. ஒன்று பிரதேச சபை மற்றையது சுகாதார வைத்தியரின் (M.O.H.) கீழ் இயங்கும் சுகாதார சேவை. ஒரு கிணறு வெட்டும் போதும் அல்லது மலசலக்கூடம் கட்டும் போதும் அதற்கான வரைபடம் வரையப்பட்டு அதை கட்டுவதற்கான அனுமதியை உள்ளூராட்சி சபை வழங்கவேண்டும். சுகாதாரப் பரிசோதகரினால் பார்வையிடப்பட்டு குறிப்பிட்ட கிணற்றுக்கும் மலசலக்கூடத்திகுமிடையே இடைவெளித் தூரம் சரியென உறுதிசெய்யப்படவேண்டும். இதற்கு மேலாக அந்த இடத்திலுள்ள மண்தன்மை பற்றியும் உயரம் தாழ்வுநிலை பற்றியும் கவனம் செலுத்தல் முக்கியம். மணல் பாங்கான இடங்களில் நீர்க்கசிவு (seepage) கூடுதலாகவிருப்பதினால் இடைவெளித் தூரம் கூடுதலாக இருக்க வேண்டியது அவசியம். உயரத்தில் மலசலக்கூடமும் தாழ்வான பகுதியில் கிணறும் அமைந்திருந்தால் இங்கு

மலக்கழிவு கிணற்றுக்கு செல்லும் வாய்ப்புக்கள் அதிகமாகும். இவற்றையெல்லாம் சரிவரக் கவனிப்பதாகவில்லை என்பதே குற்றச்சாட்டு. நெருக்கமான குடியிருப்புகளைக் கொண்ட இடங்களில் இருக்கவேண்டிய இடைவெளித்துாரம் கூட கவனிக்காது கட்டப்பட்ட கிணறுகளும் மலசலகூடங்களும் காணப்படுகின்றன. குறிப்பாக கடற்கரை கிராமங்களில் இவை கூடுதலாக உள்ளது.

குழாய் கிணறு தோண்டும் போது சுகாதாரப் பரிசோதகரினால் பார்வையிட்ட அறிக்கையோ உள்ளூராட்சி சபையின் வரைபடம் அங்கீகரித்தலோ தேவைப்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. வீட்டுச் சொந்தக்காரருக்கு தேவைப்பட்ட இடத்தில் குழாய்கிணற்றை தோண்டிவிடுகிறார்கள். மேலும் குழாய் கிணறுகள் ஆழத்தில் நீரை உறுஞ்சி இழுப்பதினால் கீழ் நிலத்திற்கு மேல் நிலத்திலுள்ள நீரும் இழுபட்டு இறங்குவதால் அண்மையிலுள்ள மலசலக்கூடக் கழிவுகள் உறிஞ்சி இழுக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உண்டு.

***குழாய் கிணறு தோண்டுவதற்கு அனுமதி கொடுக்க அதிகாரம் கொண்டவர்கள் என்று யாரும் இருப்பதாக தெரியவில்லை. தாண்தோன்றித்தனமாக குழாய் கிணறுகள் தோண்டப்படுகின்றன.*** இது சம்பந்தமாக ஒரு முடிவை உடனடியாக எடுக்க வேண்டும். நிலக்கடிநீர் மாசுபடுதலில் குழாய் கிணறுகள் முக்கிய பங்களிப்பு செய்கின்றன எனக் கூறலாம். இது முக்கிய நகரங்கள் எங்கும் பரவிவீடும் அபாயம் பற்றி இணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவெடுக்காதிருப்பது கவலையைத் தருகின்றது. இவ்வாறான விடயங்களில் அசமந்தப்போக்காக நிர்வாகம் செயற்படக்கூடாது.

ஓட்டுமொத்தமாக கூறவேண்டுமெனில் மேலே கூறப்பட்ட அமைச்சுக்கள் திணைக்களங்கள் சபைகளின் முன்னுரிமை பேணி தீர்மானங்களை எடுத்து தகுந்த நேரங்களில் செயல்படுத்த முடியாத தன்மையும் அதற்கேற்ற போதிய நிதி ஒதுக்கீடுகளை செய்யாமையும் இன்று உவர் நீர், மாசுபட்ட நீர், கழிவு நீர் எனப் பிரச்சினையாக உருவெடுக்க காரணமானதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றார்கள்.

சம்பந்தப்பட்ட திணைகளங்கள் சபைகள் இந்த நிலைமைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்பதை கோடிட்டு விளக்க முன்வருவார்களா?